
# கான இசைமணி ரங்கன்

ஆழத்து முத்துக்கள் 113

- ப. ஸ்ரீஸ்கந்தன் -

ஆகாயப் பந்தலிலே... பொன்னூஞ்சல் ஆடு தம்மா' என்ற பாடலை தனது மண்டலின் வாத்தியத்தில் இசைக்கும் போது மயங்கா தவரில்லை என்ற அளவுக்கு புகழ் பெற்ற வர் ரங்கன் அவர்கள். எக்கோடியன் வாத் தியத்துக்கு கண்ணன் அவர்களும், வயலி னுக்கு ராதாகிருஷ்ணனும், வீணைக்கு சீலன் என்பவரும் கோலோச்சிய எழுபதுகளில் கிட்டார் வாத்தியம் என்றால் ரங்கன் என தனது பெயரை நிலைநிறுத்தியவர் ரங்கன்.

'மாணிக்கத் தேரினில் மயில் வந்தது' என்ற கண்ணன் கோஷ்டியின் ஆரம்பப் பாடலை அமுதன் அண்ணாமலை பாடிக்கொண்டிருந்த அதே காலகட்டத்தில் 'மலைமீதிலும் காண லாம் - நீல மயில் மீதிலும் காணலாம்' என்ற



ரங்கனால் எழுதப்பட்டு இசையமைக்கப்பட்ட பாடலை பருத்தித்துறையைச் சேர்ந்த பாக்-கியராஜா 'ரங்கன் இசைக்குழு'வின் ஆரம் பப் பாடலாக பாடிக்கொண்டிருந்தார்.

அந்நாட்கள் மிகவும் இனிமையானவை. கலாலயா, கவிதாலயா, கண்ணன், மண்ட லேஸ்வரன், அருணா, ரங்கன், ராஜன் என்று பல்வேறு இசைக்குழுக்கள் யாழ் மண்ணில் தோன்றி இசையைப் பிரவாகித்த காலம்.

1966ல் மண்டலேஸ்வரன், ரங்கன், அறிவிப் பாளர் லோகேஸ், அரியாலையூர் கந்தவனம், தேவராஜா ஆகியோர் இணைந்து 'கலாலயா' இசைக்குழுவை ஆரம்பித்தனர். அப்போது ரங்கனுக்கு வயது 18.

யாழ்ப்பாணம் கச்சேரியடிப் பகுதியில் செல லத்துரை – லோகேஸ்வரி தம்பதிகளின் சிரேஷ்ட புதல்வராக 1948 அக்டோபர் 15ம் திகதி ரங்கன் பிறந்தார். ரங்கனின் இயற் பெயர் தனேந்திரகுமாரன். இவரது இசை ஞானத்துக்கு மூலமாக விளங்கியவர் இவ ரது தந்தையாரே.

இவரின் தந்தையார் இரத்தினம் என்று செல லமாக அழைக்கப்பட்டு வந்த செல்லத்துரை அவர்கள் கச்சேரியடியில் ஒரு தேனீர்சா லையை நடத்தி வந்தார். அவரது கையில் எப்போதும் ஒரு மண்டலின் வாத்தியம் இருக் கும். கடைக்கு வரும் வாடிக்கையாளர்களைப் பாடச்சொல்லி தான் மண்டலின் வாத்தியத் தில் இசையை வழங்குவார். அப்படியொரு இசை விற்பனராக விளங்கினார். தந்தை யின் இசை ஞானோதயம் மகனையும் பற் றிக்கொண்டதில் ஆச்சரியம் எதுவுமில்லை. சிறுவயதிலேயே மண்டலின் வாத்தியத்தை மட்டுமின்றி கிற்றார் வாத்தியத்தை இசைப் பதிலும் ரங்கன் சிறந்து விளங்கினார்.

யாழ். பரியோவான் கல்லூரியில் கல்வி பயின்ற ரங்கனின் சிறுவயதில் ஊறிவிட்ட இசைஞானம் வளர்ந்து வேர்விட இசையின் மீது தீராத மோகம் கொண்டு அன்றைய இசைஞானிகளின் இசையரசரானார். இள வயதில் 'கலாலயா இசைக்குழு'வில் சேர்ந்து கொண்ட ரங்கன் பின்னர் ஈழநல்லூர் அருணா இசைக்குழுவில் கிற்றார் கலைஞனாக இணைந்துகொண்டார்.

தந்தி வாத்தியங்களை வெகு இலாவகமாக வாசிப்பதிலும் அவற்றை வேகமாக சுருதி சேர்ப்பதிலும் வல்லவராக விளங்கிய ரங்கன் பின்னாட்களில் ரங்கன் இசைக்குழுவை ஆரம்பித்துச் சிறப்பாக நடாத்தினார். அக் காலத்திலிருந்த மற்றைய இசைக்குழுக் களை விட ரங்கன் இசைக்குழு வித்தியாச மானதாக, தனித்துவமிக்கதாக மிளிர்ந்தது. காரணம், அவர் தவில், நாதஸ்வரம், வயலின் போன்ற இசைக் கருவிகளை இசைக்குழு வில் இணைந்து அவற்றிற்கு முக்கியத்து வத்தைக் கொடுத்தார்.

தனது இசைக்குழுவில் பங்கேற்றுப் பணி புரியும் இதர வாத்தியக்கலைஞர்களின் நன் மையும் மேன்மையும் கருதி அவர்களை தனது வீட்டிற்கே அழைத்து, ஒவ்வொரு வாத்தியக் கலைஞருக்கும் உரிய இசை வெளிப்பாட்டினை இசைக்குறியீடுகளுடன் சுரம் சுரமாகச் சொல்லிக்கொடுத்துப் பயிற் றுவித்து பல இசை ஒத்திகைகளைப் பார்த்த பின்னரே அப்பாடல்களை மேடையில் பாட அனுமதிப்பார். ஒத்திகை பார்க்காத எந்தப் பாடலையும் பாடுவதற்கு அனுமதிக்காது கண்டிப்பாக இருந்தார். அதனால் தான் ரங்கன் இசைக்குழுவின் பாடல்கள் இசைத்தட்டில் இருந்தது போல துல்லியமாக வெளிவந்தன.

ரங்கனின் கிற்றார், மெண்டலின் இசைக்கா கவே தமிழ்ப் பகுதிகளில் பட்டி தொட்டிக ளெல்லாம் ரங்கன் இசைக்குழு பவனி வந்தது. அத்துடன் தவிலும் நாதஸ்வரமும் அந்த இசைக்கு மேலும் மெருகூட்டின.

அப்போது பிரபலமாயிருந்த பெண் பாடகிகள் கனகாம்பாள் சதாசிவம், பார்வதி சிவபாதம் மற்றும் ஸ்ரனிஸ் சிவானந்தன், அமுதன் அண்ணாமலை பாலச்சந்திரன், பாக்கியராசா, ஜெயா சௌந்தரராஜன் போன்ற பிரபலங் கள் எல்லாம் ரங்கன் இசைக்குழுவில் பாடி யவர்கள் தான். தவில் நாதஸ்வரம் வாசிக் கும் மானிப்பாய் கண்ணன் மேளக் கோஷ் டியைச் சேர்ந்த சுந்தரமூர்த்தி, நடராஜா ஆகியோர் ரங்கனுடன் பல வருடங்கள் இணைந்திருந்தார்கள். திருகோணமலை, மட்டக்களப்பு, முல்லைத்தீவு மாவட்டங்கள் மற்றும் தீவுப் பகுதிகளெங்கும் ரங்கன் குழு இசைத்தது.

தன்னிடம் சேர்ந்த கலைஞர்களை கௌர வமாக நடாத்தும் உயரிய பண்பு ரங்கனி டம் காணப்பட்டது. தன்னுடன் இணைந்த கலைஞர்களுக்கு ஊக்கம் கொடுத்து அவர் களை வளர்ப்பதில் மகிழ்ச்சி கண்டார். கவி தாலயா இசைக்குழு அருள்நாதன், பிரான் சில் வாழும் 'ராகம்ஸ்' சந்திரன், 'சப்தஸ்வ ரங்கள்' சதானந்தன் போன்றோர் ரங்கனால் மெருகூட்டப்பட்டு உருவானவர்கள் தான்.

கிற்றார், மண்டலின் மட்டுமல்லாது புல்லாங் குழல், ஓர்கன், சித்தார் போன்ற இசைக்க ருவிகளை மீட்டும் ஆற்றல் கொண்ட ஒரு பிறவிக் கலைஞனாக ரங்கன் விளங்கினார்.

சுருண்ட முடி, வசீகரமான முகம், வெள்ளை நிற அரைக்கை சேட், அதற்கேற்றால் போல நாலு முழ வேட்டி, நெற்றியில் விபூதிக்குறி, முகத்தில் இசைப் புன்னகையுடன் ரங்கன் மேடையில் வீற்றிருக்கும் காட்சி அலாதி யாக இருக்கும்.

யாழ் திருமறைக் கலாமன்றத்திற்கும் சில காலம் தனது பங்களிப்பை ரங்கன் வளங் கியிருந்தார். 1978 காலப்பகுதியில் பூதத் தம்பி என்னும் முழுநீள வரலாற்றுத் திரைப் படத்தை அப்போது யாழ்.மாநகரசபை ஆணை யாளராக இருந்த சிவஞானம் அவர்கள் எடுத்தபோது அதற்கு இசை வழங்கியவர் களில் ஒருவராக ரங்கன் விளங்கினார்.



அரியாலை சனசமூக நிலையத்தில் நடை-பெற்ற இசை நிகழ்ச்சியின் போது இவரது ஆற்றலைப் பாராட்டும் முகமாக 'கான இசை மணி' பட்டம் வழங்கப்பட்டு, பொன்னாடை போர்த்தி ரங்கன் கௌரவிக்கப்பட்டார்.

இசைக்குழுவை நடாத்திக் கொண்டு பகல் நேரங்களில் யாழ்நகரில் உள்ள 'நாதன் மியூசிக்கல் ஸ்டோர்ஸ்' என்று இசைக்கரு விகள் திருத்தும் கடையில் வாத்தியங்க ளைப் பழுது பார்த்து மெருகேற்றும் பணி யில் சேர்ந்துகொண்டார். பின்னர் யாழ். கச்சேரி நல்லூர் வீதியிலுள்ள அவரது இல் லத்துக்கு அருகே 'ரங்கன் இசைக்கருவி திருத்தகம்' என்ற நிறுவனத்தை ஆரம்பித்து இசைக்கருவிகளைச் சீர் செய்தார்.

ரங்கனின் சுருதி ஞானம் பரவலாகப் பேசப்-பட்டதொன்று. வீணைகளுக்கு மெட்டுக் கட்டுவது, வாத்தியங்களின் ஒலி குலைந் தால் நேர் செய்வது, கருவிகள் உடைந் தால் ஒட்டுவது, புதிதாக சுருதிப் பெட்டிகளை ஆக்குவது என்று இசை நுட்பமிக்க பணியை மேற்கொண்டு இசைக்கலைஞர்களின் மதிப் பிலும், நம்பிக்கையிலும் உயர்ந்து நின்றவர் ரங்கன்.

வேலணையைச் சேர்ந்த சரோஜினி என்ப-வரைக் காதல் திருமணம் செய்து கொண்ட ரங்கனுக்கு மொத்தம் ஐந்து பிள்ளைகள். இவர்களில் இரு பெண் பிள்ளைகள் இசையை முறைப்படி பயின்று யாழ், வேம்படி மகளிர் கல்லூரி, சுண்டுக்குளி மகளிர் கல்லூரி ஆகியவற்றில் இசை ஆசிரியைகளாக பணி புரிந்து வருகின்றனர். இவர்கள் 'நியூ வீணா காணம்' என்ற இசைப்பள்ளியையும் நடாத்தி வருகின்றனர். ரங்கனின் ஒரே மகன் கீதப் பிரியன் தனது தொழிலுடன் தன் அப்பாவின் விருப்பப்படி 'ரிதம்ஸ்' என்ற இசைக்குழு வையும் நடாத்தி வருகிறார்.

ரங்கனின் விரல்களின் வீச்சில் பரந்து பரவி எமை மகிழ்வித்த அந்தச் சுரங்களின் நாதம் 10.03.2005 அன்று நிசப்தித்தது.



sriskandan@thaiveedu.com


## உங்களுக்குத் தெரிந்த கலைஞர்கள் பற்றி நீங்களும் எழுத வேண்டுமா?

கலைஞர்கள் பற்றிய விபரங்கள், அவர்களுடைய புகைப்படங்களுடன்
உங்களுடைய பெயர், தொலைபேசி எண், புகைப்படம்
மற்றும் மின்னஞ்சல் முகவரியையும் தாய்வீட்டுக்கு அனுப்பிவையுங்கள்.

**Thaiveedu**
**Woodside Square, P.O.Box #63581**
**1571 Sandhurst Cir.**
**Toronto, ON. M1V 1V0**

**Fax : 416.849.0594**
**E-mail : info@thaiveedu.com**